1973-நவம்பர் 21]

Gang Mazdoors

* 17 Q.—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government received any representations requesting to make the workers who are involved in the work of road maintenance for many years drawing daily wages permanent; and

(b) if so, the steps taken thereon ?

தினக்கூலி பெறும் தொழிலாளர்கள்

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சாலை பராமரிப்புத் தொழிலில் ஈடுபட்டு பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிற தினக்கூலி பெறுகிற தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்று அரசுக்கு ஏதேனும் முறையீடுகள் வந்துள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் மீது மேற்கொண்ட நடவடிக்கை யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: *(அ) & (இ) : ஆம். பத்து ஆண்டுகட்கு மேல் பணிபுரிந்து நெடுஞ்சாலைக் கிராமப் பணித் துறையைச் சேர்ந்த காங் கூலிகளை நிரந்தரப்பணி உரிமை பெறும் தொகுதியின் கீழ் 1--4--1973 முதல் கொண்டு வர 26--6--73 தேதிய அரசு பொதுப்பணித் துறை ஆணை (பலவகை) எண் 1032-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.*

திரு. காட்டூர் கோபால்: *தலைவரவர்களே, இதே போன்று ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிகின்ற ஊழியர்களும் நிரந்தரம் செய்யப்படுவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: *தலைவரவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.*

Opening of an Aerodrome near Salem or Ulundurpet

* 18 Q.—THIRUVALARGAL P. THIRUGNANASAMBANDAM AND V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Central Government have elicited our views with regard to the opening of an Aerodrome near Salem or Ulundurpet; and

(b) if so, the details thereof?